**வரையறுத்த ஹிங்குரானை சீனித்தொழிற்சாலை - 2018**

**--------------------------------------------------------------------------**

வரையறுத்த ஹிங்குரானை சீனித்தொழிற்சாலையின் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2008 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் தரப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் நிருவகிக்கின்ற தரப்பினர்களதும் பொறுப்புக்கள்**

**------------------------------------------------------------------------------------------------------------------------------------**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அனைத்து கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனங்களினாலும் அந்த கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனங்கள் தொடர்பான வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சுயமாக வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறைப்படியாக ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும் அந்த அதிகாரச் சட்டத்தின் 16(2) ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு கணக்காய்வு செய்யப்படும் நிறுவனம் சம்பந்தமான நிதிக் கூற்றுக்களை சட்டத்தின் மூலம் காட்டக் கூடியவகையிலான காலப்பகுதிக்குள் அந்த கணக்காய்வு செய்யப்படும் ஆண்டறிக்கயின் வருடாந்த செயலாற்றல் அறிக்கையுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அந்த அதிகாரச் சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம் ஆண்டறிக்கை மற்றும் ஏனைய நிதிக் கூற்றுக்களை வேண்டப்படுகின்ற நேரங்களுக்குள் தயாரித்தல் இடம்பெறுதல் வேண்டுமென சான்றுபடுத்தப்பட வேண்டியதுடன் அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்திற்குரிய ஆண்டறிக்கையை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

**2. ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடு தொடர்பான அறிக்கை**

**------------------------------------------------------------------------------------------------------------------------------**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் மற்றும் 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தில் குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்படுகின்றன.

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 150(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஐந்தொகை திகதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்குப் பொறுப்பான நபரினால் சான்றுபடுத்தப்பட்டுள்ளது. என்பதனை கம்பனியின் பணிப்பாளர் சபை உத்தரவாதமளித்தல் வேண்டும்.

## 2.1 நிதிக் கூற்றுக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக் கூற்றுக்களை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கான நிதிக் கூற்றுக்கள் இவ்வறிக்கைத் திகதி வரையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | பதில்கள் வழங்கப்படவில்லை | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நிர்ணயிப்பட்ட திகதியில் கணக்குகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |

## 2.2 தொடர்ச்சியாக நிலைத்திருந்தல்

---------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 1993 ஆம் ஆண்டில் தனியார்மயப்படுத்தலுக்கு உட்பட்ட இந்நிறுவனம் வெற்றியளிக்காமையின் காரணமாக மீண்டும் 1997 ஆம் ஆண்டின் போது அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்டிருந்தும் 1998 ஆம் ஆண்டிலிருந்து எதுவித உற்பத்தி நடவடிக்கையும் இடம்பெற்றிருக்காமையினால் 2001 ஆம் ஆண்டின் போது அனைத்து ஊழியர்களுக்கும் இழப்பீடு செலுத்தி அவர்களின் சேவை முடிவுறுத்தப்பட்டிருந்ததுடன் இத் தொழிற்சாலைக்குச் சொந்தமான காணியில் ஒரு பகுதியும் கட்டிடங்களும் 30 ஆண்டுகள் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டு கல்லோயா பெருந்ததோட்ட தனியார் கம்பனி தோற்றுவிக்கப்பட்டிருந்தது. நிறுவனத்தின் சொத்துக்களைப் பாதுகாத்தல் மற்றும் நிருவாக நடவடிக்கைகளுக்காக 2016 ஆம் ஆண்டின் போது 9 ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் தற்பொழுது தற்காலிகமாக | பதில்கள் வழங்கப்படவில்லை | இந் நிறுவனத்திற்குச் சொந்தமான சொத்துக்கள் தற்பொழுது கல்லோயா பெருந்தோட்ட தனியார் கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதன் காரணமாக இந்நிறுவனத்தின் கொடுக்கல் வாங்கலை முடிவுறுத்தி கலைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமா என்பது சம்பந்தமாக கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். |

நியமிக்கப்பட்ட பொது முகாமையாளர் மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார் அதற்கிணங்க இந்நிறுவனம பெயரளவில் காணப்படுகின்ற ஒரு நிறுவனமாக மாறியுள்ளது.

## 2.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| வழங்கப்படாத கணக்காய்வு சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| 2018 ஆம் ஆண்டிற்கான கொடுக்கல் வாங்களுக்குரிய வவுச்சர்கள், காசேடு, வங்கிக்கூற்று முதலிய கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்குமாறு பல தடவைகள் எழுத்துமூலம் தெரியப்படுத்தியிருந்தும் அவை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பதில்கள் வழங்கப்படவில்லை | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்கயா்வு அதிகாரச் சட்டத்தின் 42 ஆம் பிரிவின் பிரகாரம் வேண்டப்பட்டிருந்த தகவல்களையும் விளக்கமளித்தல்களையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

---

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை**

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) தொழிற்சாலைக்குச் சொந்தமான 277.73 ஹெக்டயர் காணியும் அது தொடர்பான தொழிற்சாலைக் குத்தகை அடிப்படையில் வரையறுத்த கல்லோயா பெருந்தோட்ட தனியார் கம்பனிக்கு 2007 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்தது. 2009 மார்ச் 06 ஆந் திகதிய 09/0398/329/003 ஆம் இலக்க மற்றும் 2009 மார்ச் 18 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் குத்தகை உடன்படிக்கை தயாரிக்கப்பட்டு அதற்காக சட்டமா அதிபரின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தெரியப்படுத்தியிருந்தும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில்கள் வழங்கப்படவில்லை | அமைசரவைத் தீர்மானத்தின் பிரகாரம் குத்தகை உடன்படிக்கை தயாரிக்கப்பட்டு சட்டமா அதிபரின் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 4493 விவசாயிகளுக்கு மத்தியில் 2.5 ஏக்கர் வீதம் 11232 ஏக்கர் காணி குத்தகை உடன்படிக்கையின் மூலம் வழங்கப்பட்டிருந்தும் அக்காணிகளிலிருந்து குத்தகை பணம் அறவிடப்பட்டிருந்ததுடன் அக்குத்தகை உடன்படிக்கைகளின் காலமும் காலாவதியாகியிருந்தது. அதற்கினங்க புதிதாக குத்தகை உடன்படிக்கைகளில் கையொப்பமிட்டு அவற்றினை ஒப்படைப்பதற்கும் குத்தகை பணத்தை அறவீடு செய்வதற்கும் தேவையான நடவடிக்கை இடம்பெற்றிருக்கவில்லை. | பதில்கள் வழங்கப்படவில்லை | குத்தகை உடன்படிக்கையை மீண்டும் புதுப்பித்து உரிய குத்தகைப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (இ) | தொழிற்சாலைக்குச் சொந்தமான சொத்துக்கள் மற்றும் இருப்புக்கள் சம்பந்தமாக 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக பௌதீக மெய்மையாய்வு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததனால் சொத்துக்களின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | பதில்கள் வழங்கப்படவில்லை | சொத்துக்களின் உள்ளமையையும் அவற்றின் சரியான தன்மையையும் பரீட்சிப்பதற்காக சொத்துக்கள் சம்பந்தமாக பௌதீகச் சரிபார்த்தல் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ஈ) | தொழிற்சாலைக்குச் சொந்தமான 273 உத்தியோகப்பூர்வ இல்லங்களில் 91 இல்லங்களில் அத்துமீறிக் குடியிருப்பாளர்கள் வசித்து வருவதுடன் அவர்களை அகற்றுவதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் ஏனைய இல்லங்களிலிருந்து வாடகைப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில்கள் வழங்கப்படவில்லை | அத்துமீறிக் குடியிருப்பாளர்களை அகற்றுவதற்கும் இல்லங்களின் வாடகைப் பணத்தை அறவீடு செய்வதற்குமாக தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | நாரஹேன்பிட அலுவலகத்தில் போத்தல் உற்பத்தி சாலைக்குச் சொந்தமான இயந்திரங்களும் உபகரணங்களளும், 3 மோட்டார் சைக்கிள் ஒரு மோட்டார் வாகனம், ஹிங்குரானை தொழிற்சாலையில் காணப்பட்ட இயந்திர உபகரணங்கள் என்பவற்றை உள்ளடக்கிய சொத்துக்கள் 1997 ஆம் ஆண்டிலிருந்து விளைவற்றுக் காணப்பட்டிருந்ததனால் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாதிருந்ததுடன் அவற்றினை கைதவிர்ப்பு செய்து அரசாங்கத்திற்கு வருமானத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | பதில்கள் வழங்கப்படவில்லை | பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாத சொத்துக்களை மீண்டும் மதிப்பீடு செய்து கைதவிர்ப்பு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஊ) | தொழிற்சாலையில் காணப்பட்ட அனைத்து சொத்துக்கள் தொடர்பாக அரசாங்க மதிப்பீட்டாளரின் அறிக்கையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென கைத்தொழில் மற்றும் வணிக செயற்பாட்டு அமைச்சு செயலாளரின் 2018 பெப்ரவரி 27 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் தெரியப்படுத்துகின்றதுடன் 2017 பெப்ரவரி மாதம் நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பான குழுவினால் தொழிற்சாலையினை கலைப்பதற்காக சொத்துக்களையும் பொறுப்புக்களையும் இனங்கண்டு அவற்றினைத் தீர்த்து வைப்பதற்கு தேவையான நடவடிக்கை விரைவாக எடுக்கப்பட வேண்டுமென பணிப்புரை விடுவிக்கப்பட்டிருந்தும் இன்றுவரை தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவிலலை | பதில்கள் வழங்கப்படவில்லை | பொது முயற்சிகள் தொடர்பான குழுவினால் வழங்கப்பட்ட பணிப்புரையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்காக தேவையான செயற்பாடுகளை விரைவாக எடுத்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (எ) | ஹிங்குரானை சீனித் தொழிற்சாலைக்கு சொந்தமான பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளக்கூடிய ரூபா 222 மில்லியன் பெறுமதியான சொத்துக்களும் இருப்புக்களும் கல்லோயா பெருந்தோட்ட தனியார் கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தும் அச்சொத்துக்களை ஹிங்குரானை சீனித் தொழிற்சாலையின் கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு நடடிக்கைஎடுக்கப்பட்டிருக்கவில்லை | பதில்கள் வழங்கப்படவில்லை | உரிய பொறுப்பான நிறுவனத்தினால் தேவையான ஆலோசணையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | ஊழியர்களை நீக்குவதற்கு முன்னர் ஹிங்குரானை சுற்றுப்புறத்திலும் நாரஹேன்பிட தலைமை அலுவலகத்திலும் காணப்பட்ட சொத்துக்களை முறைப்படி பொறுப்பான உத்தியோகத்தருக்கு ஒப்படைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படாது ஊழியர்கள் நீக்கப்பட்டிருந்தனர் | பதில்கள் வழங்கப்படவில்லை | ஊழியர்களின் பொறுப்பில் காணப்பட்ட சொத்துக்களை அவர்கள் சேவையிலிருந்து நீங்குவதற்கு முன்னர் பொறுப்பான உத்தியோகத்தருக்கு ஒப்படைத்து சேவையிலிருந்து நீங்குவதற்கு முகாமைத்துவம் கவனித்தல் வேண்டும். |

### 3.2 ஆளனி நிருவாகம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | ஆவதானிப்புக்கள் |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டின் மார்ச் மாதம் வரை நாரஹேன்பிட அலுவலகத்தின் 06 ஊழியர்களும் ஹிங்குறானை அலுவலகத்தின் 03 உத்தியோகத்தர்களும் கடமையில் ஈடுபட்டிருந்ததுடன் | பதில்கள் வழங்கப்படவில்லை | நிறுவனத்தின் கொடுக்கல் வாங்கல்களை தீர்த்து முடிவுறுத்தும் வரை உரிய புத்தகங்கள் ஆவணங்களையும் மற்றும் சொத்துக்களையும் புத்தகங்களையும்பாதுகாப்பது |

2017 மார்ச் 29 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் 2017 பெப்ரவரி 28 ஆந் திததியிலிருந்து 05 ஊழியர்களின் சேவை முடிவுறுத்தப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டு இறுதிவரை 02 ஊழியர்கள் மாத்திரம் சேவையில் ஈடுபட்டிருந்தனர் தற்போது ஒரு ஊழியர் மாத்திரம் சேவையில் ஈடுபட்டிருந்தனர்.

சம்பந்தமாக தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்